1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்த முறையில் எந்த எந்த இடங்களில் எப்படி விநியோகம் செய்யலாம் என்று நிர்ணயித்துக்கொள்கிற உரிமையையே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அவர்களை அணுகலாம். அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் உறுப்பினர்கள் அந்த அந்தக் கிராமத்திற்கு ஒதுக்கப்படுகிற சர்க்கரையின் அளவுப்பட்டியலைப்பெற்று, அந்த அளவு சர்க்கரை முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதையும் கவனித்து வரலாம். சர்க்கரையை விநியோகிக்கிறவர்களும் அச்சத்தோடு நடந்துகொள்வார்கள்.

திரு. எஸ். நல்லசாமி: இப்போது வட்டத்திற்கு ஒரு நிலவள வங்கியாக இருந்தது. யூனியனுக்கு ஒரு நிலவள வங்கியாக மாற்றப்பட்டிருக்கிறது. நிலவள வங்கிகள் விவசாய மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தினால் நிலவள வங்கிகள் மூலமாக சர்க்கரை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலவள வங்கிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இன்றையதினம் ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு நாணயச் சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கரை விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களைப் பயன்படுத்துகிறோம். குறை காணப்பட்டால் பிறகு யோசிக்கலாம்.

நொய்யலாற்றின் குறுக்கே அணைகள்.

* 7.குறுகிய கால வினா—திரு. வா. அப்துல் ஜப்பார்

திரு. எஸ். நல்லசாமி :

திரு. ஆ. கு. சுப்பையா :

மாண்பு-
மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1972 ஏப்ரல் 3

(அ) நொய்யலாற்றில் இரு அணைகள் கட்ட திருச்சி தலைமை பொறியாளர் செயற்குறிப்பு ஏதும் தயாரித்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அது குறித்த அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) & (இ) இத் திட்டம் திருச்சி மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. ஆய்வு வேலை முடிந்து பரிசீலனை செய்தபின் ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. எஸ். நல்லசாமி: நொய்யலாற்று அணைகள் திட்டத்திற்கு ஏற்கனவே திட்டங்கள் போடப்பட்டு மத்திய சர்க்காரின் கன் கரன்சுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக சொன்னார்கள் அவற்றைப் பற்றி தொகுதி மக்கள் அடிக்கடி கேட்பதனால் அவை என்ன ஆயிற்று என்று அறியவிரும்புகிறேன். அவற்றுக்கு உயிர் இருக்கிறதா? அவை செத்துவிட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: நொய்யலாறு காவேரி நதியின் ஒரு முக்கிய உபநதி. அதில் உங்காம்பாளையத்தின் அருகே நொய்யலாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக முதலில் தயாரிக்கப்பட்ட திட்டம் ஆதாயம் இல்லாதது ஒன்று—இரண்டு மைசூர் அரசுடன் காவேரி நதி தண்ணீர்பற்றி தகராறு இருப்பதனால் கைவிடப்பட்டது. அதன்பிறகு வேலாயுதம்பாளையம் கிராமத்தின் அருகில் நொய்யலாற்றின் அருகே ஒரு அணைகட்டி, உங்காம்பாளையம் கிராமத்தின் அருகே வளயாபாளையம் கிராமத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான பரிசீலனை நடைபெறுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நொய்யலாற்றுத் திட்டங்கள் பற்றி பத்தாண்டுக்காலமாக பேசப்பட்டு வருகிறது. கரூரில் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். சென்ற மாதம் 28 ஆம் தேதி உண்ணாவிரதம் கூட நடத்தியிருக்கிறார்கள். அதில் கழிவுநீர் விடப்படுவதாகவும் சொல்லப்படுகிறதே. ஆகவே அமைச்சர் அவர்கள் இரண்டாவதாகச் சொன்ன திட்டத்தையாவது எடுத்து நிறைவேற்ற பரிசீலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இருக்கிற காவேரியாற்றுச் சிக்கல் காரணமாக மற்ற எல்லா விவரங்களையும் சொல்ல இயலவில்லை. இது முறையாகக் கவனிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

Drainage and Water Supply Schemes.

* 838 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : }
THIRU K. N. KUMARASWAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state the total loans made available to the Government through Life Insurance Corporation for the purpose of Drainage and Water Supply Schemes in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிநீர் வழங்கு—கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 1969-70-ம் ஆண்டிற்காக ரூபாய் 192.33 லட்சமும், 1970-71-ஆம் ஆண்டிற்காக ரூபாய் 270.78 லட்சமும் கடனுக வழங்கியுள்ளது. தொடர்ந்து நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்றுத் திட்டங்களுக்காக 1971-72-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 361.37 லட்சம் கடன் ஒப்பளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தெரிவித்துள்ளது. இதில், இதுவரை ரூபாய் 2 கோடி 14 லட்சத்து 2 ஆயிரத்துக்கான காசோலையை இக்கழகம் வழங்கியுள்ளது. மேலும், வீராணம் திட்டத்திற்காக ரூபாய் 5 கோடி கடன் வழங்கியுள்ளது.

திரு. ஏ. சுப்பிரணியம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் கோரப்பட்டதா? அப்படிக் கோரப்பட்டதற்குக் கடன் கிடைத்ததா? கடன் கிடைக்காமலிருந்தால் அதற்கு மாற்று வழி ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தத்திட்டம் செயல்படத் தொடங்குவதற்கு முன் அதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடக் கூடும்.